பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 26 புதன்கிழமை 09.02.2022 கதிர் 322

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் பலி

புத்தளத்தில் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பல்லம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்த வெடிப்புச் சம்பவத்தில் புத்தளம், ஆண்டிகம - பெரியமடு பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய 2

# மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உடனடி நடவடிக்கை எடுக்கும்

## தூதரக அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பிரேரணையை வாபஸ் பெற்றனர் முன்னணியினர்



**இந்தியத் தூதரக அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அவர்களது முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புவேளைபிரேரணையைஇன்றுவிவாதத்துக்குஎடுப்பதைத் தவிர்த்துக்கொண்டுள்ளோம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.** 2

## கிளிநொச்சியில் இருந்த 8 இந்தியப் படகுகளும் 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை





(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சியில் இருந்த 8 இந்தியப் படகுகளும் இன்று 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு ஏலமிடப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த வேளை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் தற்போது ஏலத்தில் விடப்படுகின்றன. இதற்கமைய 2

## மார்ச்சில் இலங்கை வருகின்றார் மோடி!



இலங்கை - இந்திய உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அடுத்தடுத்து பல விஜயங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சை மேற்கொள்காட்டி 2

## யாழ். பல்கலை மாணவன் மீது தாக்குதல்!

அரைக் காற்சட்டையுடன் யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் வந்த மாணவனைக் கண்டித்த சிரேஷ்ட மாணவன் யாழ். பல்கலைக்கு வெளியில் வைத்து தாக்கப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது - 2

2021 ஜி.சீ.ஈ. சாதாரண தர

## பரீட்சைக்கான விண்ணப்பம் ஏற்கும் திகதி 17 வரை நீடிப்பு

2021 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி இம்மாதம் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நாளையுடன் நிறைவடையவிருந்த நிலையில் தற்போது கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பரீட்சைகள் 2


## நேற்று மகள், இன்று தந்தை தவறான முடிவெடுத்து சாவு!

தவறான முடிவெடுத்து மகள் நேற்றைய தினம் உயிரை மாய்த்துக்கொண்ட நிலையில், மகளின் இழப்பைத் தாங்க முடியாத தந்தை இன்றைய தினம் தானும் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

அப்பகுதியைச் சேர்ந்த 2

## ரிஷாத் வெளிநாடு பயணிக்க அனுமதி



இன்று முதல் எதிர்வரும் மூன்று மாத காலத்துக்கு வெளிநாடு செல்ல அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, ரிஷாத் பதியுதீனின் கடவூச்சீட்டை வழங்குமாறு, கொழும்பு 2

# தமிழர் தீர்வு விடயம் தொடர்பில் அழுத்தம் வழங்கவில்லை டில்லி

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்



இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பாக இந்தியா எந்த அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் என்பது, உள்ளார்ந்த குறைபாடுகளால் எழுந்தவை. அவை அவதானத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைகளின் ஆரம்பப் புள்ளிகள் தொடர்பாக இன்னும் அவதானம் செலுத்தப்படவில்லை. எனினும், இவை தீர்க்க முடியாத பிரச்சினைகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். 2



## கிளிநொச்சியில் இருந்த 8 இந்தியப் படகுகளும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சிப் பகுதியில் தரித்து வைக்கப்பட்டிருந்த 8 படகுகள் நீரியல் வளத்துறை திணைக்களஅதிகாரிகளால்ஏலத்தில்விடப்பட்டன. இதன்போதே இந்த 8 படகுகளும் 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இதேநேரம் நாளை மன்னார் மாவட்டத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ள 9 இந்தியப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீனவர்களின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதுதொடர்பில்அவர்ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் –

வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இன்று புதன்கிழமை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகிய நான் முன்மொழிந்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழிமொழிந்து விவாதத்தை ஆரம்பிக்கும் வகையில் எமது தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பிரேரணை இன்று பிற்பகல் 4.50 மணியளவில் விவாதத்துக்குக் கொண்டுவரப்படும் வகையில் நாடாளுமன்றில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்காது, அவர்களது வலைகள் அழிக்கப்படுவதையும், படகுகள் சேதமாக்கப்படுவதையும், மீனவர்கள் தாக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் இலங்கைக் கடற்படையும் இலங்கை அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றமை தொடர்பில் குறித்த விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

இந்நிலையில், இன்று நண்பகல் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டு, எம்மால் முன்னெடுக்கப்படவிருந்த விவாதம் தொடர்பில் கலந்துரையாடினார். அதன்போது நாம், எமது வடபகுதி மீனவர்களது கடற்தொழிலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில், இலங்கை கடற்படை நடவடிக்கை எடுக்காது எமது வடபகுதி மீனவர்களுக்கும் எல்லைதாண்டிவரும்மீனவர்களுக்கும் இடையில் மோதலைத் தீவிரப்படுத்தி பகைமையை வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் குறித்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்தோம்.

அதன்போது, தூதரக அதிகாரி, இந்தப் பிரச்சினை தொடர்பில் தமது தரப்பிலிருந்தும் தாம் அக்கறை செலுத்துவதாகவும், மேற்படி மீனவர் பிரச்சினையானது யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் ஒரு நெருக்கடி மிகுந்த சிக்கல் நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த நெருக்கடி நிலையைத் தாம் புரிந்து கொண்டுள்ளதாகவும், அந்தவகையில் இப்பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் முடிவெடுத்துள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக குறித்த விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அந்தத் தூதரக அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அவர்களது முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் மேற்படி பிரேரணையை இன்று விவாதத்துக்கு எடுப்பதைத் தவிர்த்துக்கொண்டுள்ளோம். – என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

## கட்டுத்துவக்கு வெடித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபரால் தயாரிக்கப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் கட்டுத்துவக்கே தவறுதலாக வெடித்துள்ளது என மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மார்ச்சில் இலங்கை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்னிலங்கை ஊடகம் ஒன்று, இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இலங்கைக்கு வரவாய்ப்புள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் புதுடில்லிக்கான தனித்தனியான விஜயங்களை முடித்துக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய வாய்ப்புவுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## யாழ். பல்கலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தினுள் கனிஷ்ட மாணவன் ஒருவர், பல்கலைக்கழக மாணவன் அல்லாத தன்னுடைய நண்பர் ஒருவருடன் அரைக் காற்சட்டை அணிந்து பல்கலைக்கழக வளாகத்தினுள் வந்துள்ளார்.

அதனை அவதானித்த மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்கள் குறித்த மாணவனை அழைத்து அரைக் காற்சட்டையுடன் பல்கலை வளாகத்தினுள் நுழைந்தமையைக் கண்டித்து, பல்கலை வளாகத்தை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

அதன்போது , மாணவனுடன் வந்த பல்கலைக்கழகம் சாராதவர், சிரேஷ்ட மாணவர்களுடன் முரண்பட்டுள்ளார். அதையடுத்து அங்கு வந்திருந்த பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், அரைக்காற்சட்டையுடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் நின்றவர்களை வெளியேற்றி இருந்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர், அரைக் காற்சட்டையுடன் வந்த நபர்களைக் கண்டித்த சிரேஷ்ட மாணவர் ஒருவர் கல்லுண்டாய் வெளி ஊடாக தனது நண்பர் ஒருவரின் ஓட்டோவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை, ஓட்டோவைக் கல்லுண்டாய் வெளியில் வழி மறித்த கும்பல் ஒன்று மாணவன் மீது சரமாரியாகத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக ஒழுக்காற்று குழுவுக்குத் தாக்குதலுக்கு இலக்கான மாணவன் முறையிட்டதை அடுத்து, பல்கலைக்கழகத்துக்கு வெளியே நடைபெற்ற சம்பவம் என்பதால், அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக மாணவனால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பரீட்சைக்கான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திணைக்களத்தின் www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிகளுக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் Exam SriLanka எனும் முகவரிக்கோ பிரவேசித்து சாதாரண தர பரீட்சைக்கு இணையம் ஊடாக விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்று மகள், இன்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிருஷ்ணகுமார் கிரிஷ்கா (வயது 17) ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் நிலையில் அங்கு தன்னுடன் வேலை செய்யும் இளைஞரைக் காதலித்து வந்துள்ளார்.

மகளின் காதல் விவகாரம் தந்தைக்குத் தெரிந்த நிலையில் அவர் அதனைக் கண்டித்துள்ளார். அந்நிலையில் நேற்று மகள் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

யுவதி உயிரிழந்த நிலையில் அயலவர்கள் உறவினர்கள், யுவதியின் உயிரிழப்புக்கு தந்தையே காரணம் எனக் குற்றஞ்சாட்டிய நிலையில், யுவதியின் தந்தை இன்று காலை தானும் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

ஒரே வீட்டில் அடுத்தடுத்த நாளில் மகளும் தந்தையும் தமது உயிரை மாய்த்துள்ளமை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ரிஷாத் வெளிநாடு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலதிக நீதிவான் ரஜித்ரா ஜயசூரிய இன்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தீர்வு விடயம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 2 அல்லது 3 மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும், இந்தியாவில் இருந்து இலங்கை மின்சாரத்தைப் பெறக்கூடியதாக இருந்தால் பாரிய நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## கிளிநொச்சியில் இருந்த 8 இந்தியப் படகுகளும் ........





## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வதேச விசாரணையின் அவசியம்

நடந்து முடிந்த குற்றச் செயல்களை விசாரிப்பதில் கொழும்பு அரசு காட்டும் குளறுபடித்தனத்தை கிறிஸ்தவ மத பீடமும் அம்பலப்படுத்தி வருகின்றது.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் சம்பந்தப் பட்ட விடயத்தில் இந்த அரசின் போக்கில் அதிருப்தி யுற்றுள்ள கிறிஸ்தவ மத பீடத் தரப்பு, அது தொடர்பில் இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

ஒன்று – இந்த விவகாரத்தில் இலங்கை கிறிஸ்தவ மக் களுக்கு உதவும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை பாப் பாண்டவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். எந்த வழிகளிலும் உதவ அவர் தயாராக உள்ளார் என்பது.

இரண்டு – ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து வெளிக்கொணர்ந்து பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் சர்வதேச விசா ரணை ஒன்றை நடத்தும்படியான கோரிக்கை ஒன்றை சர்வதேச சமூகத்திடம் முன்வைப்போம்.

இவ்விவகாரத்தை ஒட்டி கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் புனித பாப்பரசருக்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும், எந்தவித உதவி ஒத்தாசையை வழங்கவும் தாம் தயாராக இருக்கின்றார் என புனித பாப்பரசர் பதிலளித் துள்ளார் என்றும் வண. பிதா சிறில் காமினி பெர்னாண்டோ தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

அதாவது, உள்நாட்டில் நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறா என்பதால் இவ்விடயத்தில் சர்வதேச விசா ரணை ஒன்றுக்கு இலங்கை கிறிஸ்தவ மத பீடம் அழைப்பு விடுக்குமானால் அதற்கும் புனித பாப்பரசர் ஒத்துழைப்புத் தருவார் என்பதுதான் இவ்விடயத்தில் தொக்கி நிற்கும் தகவலாகும்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் நடந்து இன்னும் மூன்று வருடங்கள் கூட முடியவில்லை. அதற்குள் இந்த விடயத்துக்கு உள்நாட்டில் நீதி, நியாயமான விசா ரணை கிட்டாது என்ற அவநம்பிக்கை கருத்தியலுக்கு பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகம் வந்துவிட்டது.

இவ்வளவுக்கும் இந்தத் தாக்குதலை நடத்தியது அரசோ அரசுப் படைகளோ அல்ல. முஸ்லிம் தீவிரவாதக் குழுதான்.

அதில் சில தரப்புக்களின் சம்பந்தம் – பின்னணி – இருக்கும் என்று சந்தேகம் தெரிவிக்கப்படும் நிலையில், உண்மைகள் வெளிவராமல் தடுக்கப்படுவதற்காகப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகின்றமை அம்பலமாகி யுள்ளது. அது தொடர்பில்தான் கொழும்புப் பேராயர் சீற்றம் வெளியிட்டு வருகின்றார்.

ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் விசாரணை களையே நீதி நியாயமாக நடத்தாமல் முட்டுக்கட்டை போடும் தென்னிலங்கை ஆட்சிப் பீடம், யுத்தத்தின் இறுதிக் கட்டத் தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற் றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை குறித்து எவ்வாறு நீதி விசாரணை நடத்தும்? அதுவும் தன்னுடைய அரசுப் படைகளுக்கு எதிரான இத்தகைய படுமோசமான குற்றச் சாட்டுக்கள் குறித்து நீதியான விசாரணைகளை முன் னெடுக்கும்?

அதனால்தான் அந்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைகளைத் தமிழர்கள் கோருகின்றார்கள்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்த ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோரும் கிறிஸ்தவ தலைமை, பதின்மூன்று ஆண்டுக ளுக்கு முன்னர் அதைவிட மோசமாக நடந்தேறிய தமிழர்களுக்கு எதிரான யுத்தக்குற்றங்கள் குறித்தும் சர்வதேச விசாரணைக்குக் கோரிக்கை முன்வைக்க வேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவ தரப்பின் சர்வதேச விசாரணைக் கோரிக்கைக்கு ஒரு தார்மீக நியாயம் கிடைக்கும்.

# சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு பாதுகாப்பான நாடு இலங்கை!



## ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

இலங்கை சுற்றுலாப் பயணத்தை மேற் கொள்வதற்கு பாதுகாப்பான நாடாகும் என்று பல நாடுகளால் அடையாளம் காணப்பட் டுள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதனால் இந்த வருடத்தில் 1.2 மில்லி யன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் வைத்தியர்ரமேஷ்பத்திரணதெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்த அளவில் சுற்றுலாப் பயணிக ளின் வருகை இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதற்காக விசேட பிரசார நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை மக் கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கு மத்தியில் சுகாதார வழிகாட்டிகளை உரிய முறையில் கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர் எனப் பல வெளிநாட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளிலும் கொவிட் தொற்று நிலைமை மாறும் பட்சத்தில் மேலும் பல சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவார்கள் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சு தொடர்பாக அமைச்சர் பதிலளிக்கையில், இவ்வாறான சர்வதேச நிறுவனங்களுடனான பேச்சுகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆசிய அபி விருத்தி வங்கி, உலக வங்கி, ஜப்பான், சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் தற்போதைய டொலர் நெருக்கடி தொடர்பாகப் பேச்சு நடத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், 6.9 பில்லியன் கடனைத் திருப்பிச் செலுத்த அர சாங்கம்உறுதியுடன்செயற்பட்டுவருகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர் பான கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், எதிர்காலத்தில் நோயை முற்றாகக் கட்டுப் படுத்திக்கொள்ள 3 ஆவது தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

உலக நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் பரவி வருகிறது. இதனால் தொற்றின் கார ணமாக ஏற்படக்கூடிய சிக்கல் நிலையைத் தடுப்பதற்குத் 2 தடுப்பூசிகளையும் பெற்று கொள்வதுடன் 3 ஆவது தடுப்பூசியைப் பெற் றுக் கொள்வதற்கும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் பொது மக்களை கேட்டுக்கொண்டார்.

# மின்வெட்டு ஏற்படும் நேரத்தை தெளிவாக அறிவிக்கப் பணிப்பு

## ஜனாதிபதி கோட்டா விடுத்தார்



மின்வெட்டு ஏற்பட்டால் மின்வெட்டு ஏற் படும் நேரத்தை தெளிவாக அறிவிக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவ னங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் முடிவு செய்து தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் மின்சாரம் துண்டிக்கப்படாமல் மக்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முயற்சி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓ.எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டது

2021 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதி இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டது எனப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையா ளர் நாயகம், எல்.எம்.டி. தர்மசேன விடுத் துள்ள அறிக்கையில்,

இதற்கு முன்னர் பெப்ரவரி 03 வரை நீடிக்கப்பட்டிருந்த குறித்த விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி பெப்ரவரி 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்ட நிலையில், அதுமே லும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒன்லைன் முறை மூலம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான www.doenets.lk அல்லது onlineexams.gov.lk/eic அல்லது உத்தியோகபூர்வ கையடக்கத் தொலைபேசி செயலியான Exams Sri Lanka (Android iOS) ஊடாக, அறிவு றுத்தல்களை பின்பற்றி இதற்காக விண்ணப் பிக்கலாம்.

# அமைச்சுடனான கலந்துரையாடல் தோல்வி சுகாதார ஊழியர்கள் போராட்டம் தொடரும்!

சுகாதார அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது என சுகாதார ஊழி யர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற் சங்கங்கள் கடந்த திங்கட்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன்காரணமாக பல வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிப் படைந்துள்ளன. இதேவேளை, சுகாதார ஊழியர்களினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு போராட்டம் காரணமாக கொழும்பு நகர மண்டப பகுதியில் நேற்று மதியம் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.

# மடகாஸ்கரை புரட்டிய சூறாவளி; 20 பேர் உயிரிழப்பு



மடகாஸ்கரின் கிழக்கு கடற்கரையில் பட்சிராய் சூறாவளி தாக்கியதில் குறைந்தது 20பேர் உயிரிழந்துள்ளதோடு 55 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மணிக்கு 235 கிலோமீட்டர் (மணிக்கு 146 மைல்) வேகத்தில் காற்று வீசும் வகை 4 சூறாவளியான பட்சிராய், மானஞ்சரி நகருக்கு அருகே தீவின் கிழக்குக் கடற்கரையைத் தாக்கியது.

ஜனவரி 22ஆம் திகதி தாக்கிய மற்றொரு வெப்பமண்டல புயலான அனாவின் விளைவுகளால் ஏற்கனவே தத்தளித்து வரும் மடகாஸ்கருக்கு மேலும் பேரழிவைக் கொண்டு வந்த பட்சிராய் சூறாவளி பெப்ரவரி 5ஆம் திகதி மடகாஸ்கரின் கடற்கரையை தாக்கியது.

இந்த ஆண்டின் இரண்டாவது பெரிய சூறாவளியான பட்சிராய், மடகாஸ்கரை விட்டு வெளியேறும் போது மேலும் சிதறி மொசாம்பிக்கிற்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக் கூடுமென என்று வானிலை துறை தெரிவித்துள்ளது.

பட்சிராய் சுமார் 3 ஆயிரம் குடியிருப்புகள் மற்றும் அரசு கட்டடங்களை அழித்ததுடன், மானஞ்சரி மற்றும் அருகிலுள்ள நகரங்களில் 5,700 பேரை வெள்ளத்தில் மூழ்கடித்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

புயலின் அழிவு மற்றும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட ஜனாதிபதி ஆண்ட்ரி ரஜோலினா, கடந்த திங்கள்கிழமை மனஞ்சரி நகருக்குச் சென்றார். இதன்போது இடர் மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான தேசிய அலுவலகத்தின் தலைமை இயக்குனர் ஜெனரல் எலாக் ஆண்ட்ரியன்கஜா கூறுகையில், 'அரசாங்கம் செய்யும் முதல் விடயம், நிர்வாகக் கட்டடங்களை எவ்வாறு சரி செய்தல் மற்றும் மறுசீரமைப்பது, சுகாதார மையங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை அளிப்பது. இந்தப் பகுதிகளில், குறிப்பாக மனஞ்சரியில் பல நிர்வாகக் கட்டிடங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன' என கூறினார்.



## ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு செல்லும் எரிவாயு குழாய் துண்டிக்கப்படும்: அமெரிக்கா எச்சரிக்கை!

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கும் என்ற அச்சம் நிலவி வருகின்ற நிலையில், இந்த நடவடிக்கையை ரஷ்யா முன்னெடுத்தால் ரஷ்யா-விலிருந்து ஜேர்மனிக்கு பெட்ரோலிய பொருள்கள் கொண்டு செல்லும் 'நார்ட் ஸ்ட்ரீம் 2' என்னும் எரிவாயு குழாய் துண்டிக்கப்படும் என அமெரிக்க எச்சரித்துள்ளது.

வொஷிங்டனில் ஜேர்மன் சான்சலர் ஓலாஃப் ரோல்டஸ் உடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பிறகு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பைடன் மேலும் கூறுகையில், 'ரஷ்யா படையெடுத்தால் அதாவது டாங்கிகள் அல்லது துருப்புக்கள் உக்ரைனின் எல்லையைத் தாண்டினால் மீண்டும் இனி நோர்ட் ஸ்ட்ரீம் 2 இருக்காது. நாங்கள் அதை முடிவுக்கு கொண்டு வருவோம்' என கூறினார்.

'நார்ட் ஸ்ட்ரீம் 2' ஜேர்மனியின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அதை எப்படி சரியாகச் செய்வீர்கள்? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பைடன், 'நாங்கள் செய்வோம், நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், நாங்கள் அதை செய்ய முடியும்' என கூறினார்.

அதே கேள்வியை ஸ்கோல்ஸிடம் கேட்டபோது, ஜேர்மன் சான்சலர் ஓலாஃப் ரோல்டஸ் மிகவும் வித்தியாசமான பதிலைக் கூறினார்.

'உக்ரைனுக்கு எதிராக இராணுவ ஆக்கிரமிப்பு இருந்தால் தேவையான பொருளாதாரத் தடைகளுடன் தயாராக இருக்க எல்லாவற்றையும் நாங்கள் தீவிரமாக தயார் செய்துள்ளோம்,' என்று அவர் நோர்ட் ஸ்ட்ரீமைக் குறிப்பிடாமல் கூறினார்.

'நாங்கள் எல்லாவற்றையும் பொதுவில் உச்சரிக்காத செயற்முறையின் ஒரு பகுதியாகும், ஏனென்றால் இன்னும் அதிகமாக வரக்கூடும் என்பதை ரஷ்யா புரிந்து கொள்ள வேண்டும்' எனக் கூறினார்.

ரஷ்யாவிற்கும் ஜேர்மனிக்கும் இடையிலான நார்ட் ஸ்ட்ரீம் 2 இயற்கை எரிவாயு குழாய் கடந்த ஆண்டு செப்டம்பரில் முடிக்கப்பட்டது. ஆனால் அது இன்னும் உண்மையான எரிவாயுவை கொண்டு செல்லவில்லை.

## கமீலாவுக்கு பதவி வழங்க பிரித்தானிய ராணி விருப்பம்



அடுத்த அரசராக சார்லஸ் பதவியேற்கும்போது, அவரது மனைவி கமீலா, ராணியாக இருக்க வேண்டுமென, ராணி இரண்டாம் எலிசபெத் விருப்பம் தெரிவித்துள்ளார்.

'குயின் கன்சார்ட்'பிரிட்டன் ராணியாக பொறுப்பேற்று வரும் ஜூனில் 70 ஆண்டுகளை நிறைவு செய்கிறார். 95 வயதாகும் ராணி எலிசபெத். இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ராணி எலிசபெத் தெரிவித்துள்ளதாவது, இத்தனை ஆண்டுகளாக மக்கள் எனக்கு அளித்த ஆதரவுக்கு, ஒத்துழைப்புக்கு நன்றி. இதற்கு நான் கடமைபட்டுள்ளேன்.எனக்குப் பின், என் மகன் சார்லஸ், அரசராகப் பொறுப்பேற்கும்போதும், இந்த ஆதரவைத் தொடர வேண்டும்.

சார்லஸ் அரசராகப் பொறுப்பேற்கும் போது, அவரதுமனைவி கமீலாவை ராணியாக ஏற்க வேண்டும். அந்தக் கடமையை நிறைவேற்ற அவர் முழுத் தகுதி உடையவர் என கூறினார். பிரித்தானிய அரச குடும்ப வழக்கத்தின்படி ராணி ஆட்சி பொறுப்பை ஏற்கும்போது, அவரது கணவர்கள், 'பிரின்ஸ் கன்சார்ட்' எனப்படும் இளவரசராகவே கருதப்படுவர். ராஜாவாக கருதப்பட மாட்டார்கள். அதே நேரத்தில் அரசர் பொறுப்பை ஏற்கும்போது, அவரது மனைவி 'குயின் கன்சார்ட்' எனப்படும் ராணியாகவே கருதப்படுவர். இளவரசர் சார்லஸ், டயானாவை திருமணம் செய்தார். கடந்த 1996இல் அவர்கள் விவாகரத்து விபத்தில் இளவரசி டயானா உயிரிழந்தார். கடந்த 2005இல் சார்லஸ், கமீலாவை திருமணம் செய்தார். கமீலாவுக்கும் இது இரண்டாவது திருமணம். தற்போது குயின் கன்சார்ட்டாக கமீலா இருக்க வேண்டும் என, ராணி எலிசபெத் தெரிவித்துள்ளதால், இது தொடர்பாக இருந்த குழப்பங்களுக்கு தெளிவான பதில் கிடைத்துள்ளது. பிரித்தானிய மக்களிடையே நீண்ட நாள்களாகவே ஒரு குழப்பம் நிலவியது. கமீலா, சார்லசின் முதல் மனைவி இல்லை. இருவருமே முதல் திருமணத்தை விவாகரத்து செய்து, மறுமணம் செய்தவர்கள். இதனால் சார்லஸ் அரசராகப் பொறுப்பேற்கும் போது, கமீலாவை, இளவரசி என அழைக்க வேண்டுமா அல்லது ராணி என அழைக்க வேண்டுமா என்ற சந்தேகம் இருந்தது. கமீலாவை ராணியாக பிரிட்டன் மக்கள் அங்கீகரிப்பரா என்ற குழப்பமும் இருந்தது.

பிரின்சஸ் கன்சார்ட் என, அதாவது இளவரசி என அழைக்கப்பட்டால், அவருக்கு அரச குடும்பத்துக்கான மரியாதை கிடைக்கும். ஆனால் ராணி அந்தஸ்து கிடைக்காது. இந்த குழப்பத்துக்கு தீர்வு காணும் வகையில், தற்போது ராணி எலிசபெத்தே, கமீலாவுக்கு குயின் கன்சார்ட் எனப்படும் ராணிக்கான அந்தஸ்தை வழங்கி விட்டதால், இனி இதற்கு மறு பேச்சு இல்லை. சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. பிரித்தானிய மக்களால் கமீலா, 'ராணி கமீலா' என, இனி அழைக்கப்படுவார்.



## ஆப்கான் பயங்கரவாதிகள் 50 பேர் சரணடைந்தனர்

ஆப்கானிஸ்தானில் ISIS- K என்ற அமைப்பைச் சேர்ந்த 50 பயங்கரவாதிகள் சரணடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானை கைப்பற்றிய தாலிபான்களுக்கு கூடுதல் தலைவலியாக உள்ளூர் கிளர்ச்சியாளர்களும், ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரும் இருந்தனர்.

இந்நிலையில் நங்கர்கர் மாகாண அரசிடம் 50 ஐ.எஸ். தீவிரவாதிகள் சரணடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பழங்குடியின மக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து 50 பேர் சரணடைந்தனர் எனவும், பொது மன்னிப்பு அடிப்படையில் தலிபான்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என மாகாண அரசு தெரிவித்துள்ளது.

# வவுணதீவு காஞ்சிரங்குடா கிராமத்திற்கான குடி தண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தொடக்கி வைத்தார்

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா கிராமத்திற்கான குடி தண்ணீர் இணைப்பினை வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றன.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப் படுத்தும்நோக்கில் முன்னெடுக்கப்படும், அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இது முன்னெடுக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, காஞ்சிரங்குடா கிராமத்திற்கான குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தையும், காஞ்சிரங்குடா தொடக்கம் பன்சேனை வரையிலான 6 கிலோமீற்றர் பிரதான வீதியை கொங்கிறீட் வீதியாக புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளையும் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்துவைத்தார்.



இராஜாங்க அமைச்சரின் சிபாரிசிற்கு அமைய நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக காஞ்சிரங்குடா கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின் ஊடாக சுமார் 125 குடும்பங்கள் பயனடையவுள்ளன. இதற்காக முதற்கட்டமாக முப்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளைகுருந்தையடிமுன்மாரி கிராமத்தில் இருந்து ஆரம்பித்து பன்சேனை வரையாக பிரதான வீதியாக – நீண்டகாலமாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட – சுமார் 6 கிலோ மீற்றர் வீதியானது வீதிப் பெருந்தெருக்கள் அமைச்சின் ஊடாக இருபத்தியைந்து கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் செப்பனிடும் பணிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் வை.சந்திரமோகன், நீர்ப்பாசன நிலையப் பொறுப்பதிகாரி நிர்மலன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர்கள், ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் கும்பாபிஷேக ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஆலய முன்றிலில் ஆலயத் தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் கடந்த ஞாயிறு நடைபெற்றது.

அவ்வாலயத்தின் ஆவர்த்தன மகா கும்பாபிஷேகம் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

ஆலயபரிபாலனசபையின் நிருவாக சபைக்கூட்டத்தில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் கும்பாபிஷேகம் தொடர்பான விளக்கத்தையும், நிதியின் அவசியத்தையும் எடுத்துரைத்து, இதுவரை தானாக மனமுவந்து நிதியுதவியளித்த அமெரிக்காவில் வாழும் தம்பிலுவில் றதீஸ்பாண்டியன், ஆஸ்திரேலியாவில் வாழும் பாண்டிருப்பு ஜனபாலச்சந்திரன் மற்றும் பல உள்நாட்டுபக்தர்கள் பற்றியும் எடுத்துரைத்து நன்றியும் தெரிவித்தார்.

தேசத்துக் கோயிலான இவ்வாலயத்திற்கு உலகெங்கும்வாழும் தமிழ்மக்களின் நிதிப்பங்களிப்பு மேலும் தேவை. அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆலயத்திற்கான எதிர்கால திட்டம் தொடர்பாகவும் கும்பாபிஷேகத்திற்கென தெரிவான குழுக்களின் வகிபாகம் பற்றியும் அவை துரிதமாக இயங்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். ஏனைய ஆலோசகர்களான வி.ஜெயந்தன்,வா.குணாளன் ஆகியோர் கும்பாபிஷேகத்திற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக நிர்வாகிகளின் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக் கூறினார்.

அங்கு நிலவிய சர்ச்சையைத் தீர்த்து வைத்த அற்புத நிகழ்வுக்குரிய ஆலய மணியைக் காண்பதில் பக்தர்கள் கரிசனை காட்டுகின்றனர்.

வெள்ளி ,பௌர்ணமி மற்றும் விசேட திங்களில் அங்கு விஷேட பூஜை நடைபெறுகின்றமை வழக்கம். கடந்த வெள்ளிக்கிழமை மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்கு வருகை தந்திருந்தார்கள்.

நாகபாம்பிற்கு பால் வார்க்கும் சமய சடங்கு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. கூடவே பொங்கல் நிகழ்வுகளும் அன்னதான நிகழ்வுகளும் நேர்த்திகளும் இடம் பெற்றிருந்தன.

## சம்மாந்துறை கல்வி வலயத்தில் நேற்று கல்வி அபிவிருத்தித் திட்ட நூல் வெளியீடு!



சம்மாந்துறை வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட 'பலோ மீ' (Follow me) நூல் வெளியீட்டுவிழா வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல்நஜீம் தலைமையில் நேற்று பணிமனையின் அய்ன்ஸ்ரைன் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்வி திட்டமிடலுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம். ஹைதர்அலி தலைமையிலான குழுவினர் தயாரித்த இந்நூலின் முதற்பிரதியினை அவர் பணிப்பாளர் நஜீமிடம் வழங்கிவைத்தார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான பி.எம்.யசீர் அறபாத், ஏ.எல். அப்துல்மஜீட் , உதவிக்கல்விப் பணிப்பாளர்களான ஏ.நசீர், யு.எல். றியால் ,வி.ரி.சகாதேவராஜா, எ.எல்.எம் றஷீன் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எ.சபூர்தம்பி, யு.எல்.மஹ்மூட்லெவ்வை உள்ளிட்ட சேவைக்கால ஆசிரியஆலோசகர்கள் அனைவருக்கும் இதன் பிரதிகள் வழங்கப்பட்டன.

வழமைக்கு மேலதிகமாகப் பொதுப் பரீட்சைகளின் வலயமட்டப் பெறுபேற்று பகுப்பாய்வும் இம்முறை வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நூல்தயாரிப்பில் சம்பந்தப்பட்ட அனைவரையும் பணிப்பாளர் நஜீம் நன்றி கூறி வாழ்த்தினார்.

## யோகாசனம், பண்ணிசை, பரதக்கலை வகுப்புகள் மட்டு. காரைதீவில் ஆரம்பம்



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இயங்கிவரும் இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவக சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலையத்தில் தெய்வீகக்கலை பயிற்சிவகுப்புகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

ஆன்மீக முன்னேற்றத்திற்கும் மன ஒருமைப்பாட்டுக்கும் ஆரோக்கிய வாழ்விற்கும் வழிகாட்டும் தெய்வீகக் கலைகளைப் பயில்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துத்தும் நோக்குடன் யோகாசனம், பண்ணிசை, பரதநாட்டியம் போன்ற 6மாத கால பயிற்சிநெறிகள் கடந்த வார இறுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வு காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்தப் பணிமன்றத் தலைவர் வெ.ஜெயநாதன் மற்றும் வளவாளர்களான திருமதி புவனேஸ்வரி ஜெயக்கணேஷ், திருமதி ரவீந்திரன் யோகேஸ்வரி, திருமதி சர்மினி சுதாகரன், செல்வி ஜெ.தட்சாலினி, கு.குமாரதாசன், க.கோகுலராமன் மற்றும் இந்துக் கலாசார உத்தியோகத்தர்களான காரைதீவு செயலக உத்தியோகத்தர் திருமதி சிவராஜா சிவலோஜினி, சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் திருமதி ரீபிரியா கங்கைநாதன், மாவட்டச் செயலக உத்தியாகத்தர்கள் ந.பிரதாப், கு.ஜெயராஜி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காலிக்கு வெள்ளிக்கரண்டி நுவரெலியாவுக்குத் தகரம்!

## அரசு கடும் இனப் பாகுபாடு என மனோ காட்டம்



எங்கள் ஆட்சியின் போது, 29 ஒக்ரோபர் 2019 ஆம் வருடம் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியின்படி, நுவரெலியா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பழைய பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டோ, தரமுயர்த்தப்பட்டோ புதிய முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படவேண்டும் என்பதே அரசாங்க முடிவு.

இதன்படி புதிதாக வந்த இந்த ஆட்சியில், காலியின் பழைய உப பிரதேச செயலகங்கள், புதிய முழு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டு கோலாகலமாகத் திறந்தும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதே அரசாங்க வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்துக்கான ஐந்து மேலதிக முழு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை உதாசீனம் செய்து விட்டு, இரண்டு உப பிரதேச செயலகங்களை மாத்திரம் பெயரளவில் இந்த அரசாங்கம் திறந்து வைத்துள்ளது.

காலிக்கு வெள்ளிகரண்டி, நுவரேலியாவுக்கு தகரம். இது இன பாரபட்சமில்லையா? அப்புறம் ஏன் மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குணநாதன் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்நாட்டில் இன பாரபட்சம் இருப்பதாக கூறியமை கண்டு வெளிநாட்டு அமைச்சர் ஜி. எல். பீரிஸ், இந்த வயதான வேளையில், பூமிக்கும், வானத்துக்குமாக குதிக்கிறார்? என தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா ஒரு நீண்ட கால மனித உரிமை போராளி. அவரை நான் 2005 ஆம் வருடம் முதல் அறிவேன். கொழும்பில் வெள்ளை வான் கடத்தல்களுக்கு எதிராக எமது மக்கள் கண்காணிப்பு குழு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அவர் எம்முடன் இணைந்து செயற்பட்டார். அவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்த பிரதேச செயலகங்கள் பற்றி கூறினாரோ என எனக்குத் தெரியாது. ஆனால் இந்நாட்டு இன பாரபட்ச நடப்பில் இது ஒரு சிறிய உதாரணம்.

கடந்த 74 வருட காலமாக இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமை பகிர்வு, அபிவிருத்தி இரண்டிலும், பித்தளை, தகர கரண்டிகள் தான் காட்டப்பட்டுள்ளன.

அத்தனைக் கும் காலியை விட, நுவரேலியாவில் தான் இந்த பிரதேச செயலக பிரிவில் சனத்தொகை அதிகம். நீண்ட காலமாக அங்கே பிரதேச சபைகளே போதுமானளவு இல்லாமல் இருந்து அவற்றை நாமே பிரித்து பெற்றுக் கொடுத்தோம். இப்போது அவற்றுக்கு சமாந்திரமாக பிரதேச செயலகங்களைக் கேட்டால் கிடைக்கவில்லை. அமைச்சரவை தீர்மானம் எடுத்து வர்த்தமானி பிரகடனம் செய்தாலும் கிடைக்கவில்லை. ஆனால், அதேவர்த்தமானியில்நுவரேலியாவுடன் சேர்ந்து அறிவிக்கப்பட்ட காலிக்கு கொடுக்கிறீர்கள். நுவரேலியா வில் தமிழர் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

ஒருவேளை நுவரேலியாவில் தமிழர் வாழாவிட்டால் கிடைத்திருக்கும். அப்படியானால், இதுதானே இன பாரபட்சம்? அரசாங்க உடன்பாடு ஏற்பட்டு வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படுவதுதான், இதில் மிக முக்கிய அங்கம். அதை நாம் செய்து முடித்து விட்டோம். ஆட்சி முன்கூட்டியே கலைக்கப்பட்டது. இன்றைய ஆட்சி நாம் விட்ட இடத்தில் இருந்து முன் கொண்டு செல்ல வேண்டும். காலிக்கு மாத்திரம் முன்கொண்டு செல்கிறார்கள். நுவரெலியாவுக்கு இல்லை. அப்படியானால், இந்நாட்டில் நாம் மாற்றாந்தாய் மக்கள். இதுதான் பாரபட்சம்.

வெள்ளி கரண்டி பெரும்பான்மை மக்களுக்கு என்றால், ஏனைய மக்களுக்கு பித்தளை கரண்டி. மலையக மக்களுக்கு பித்தளை கரண்டிகூட கிடைப்பதில்லை. வெறும் தகரம்தான். அதனால்தான் பிரதேச சபைகள் பெறுவதற்கே 1987 இல் இருந்து முப்பது வருடங்கள் நமது மக்கள், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆட்சியில் பங்காளி ஆகும்வரை காத்திருந்தார்கள்.

இத்தகைய இனபாரபட்சங்களைதான் அம்பிகா சற்குருநாதன் எடுத்துக் கூறியுள்ளார் என்பதை படித்த பேராசிரிய அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கு எடுத்து கூறுகிறேன். - என்றார்



# கீரிமலை சிறாப்பர் மட புனரமைப்பு இரண்டாம் கட்டப் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம் - கீரிமலை சிறாப்பர் மடத்தின் மீள் புனரமைப்பிற்கான இரண்டாம் கட்ட பணிகளுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அண்மையில் சிறாப்பர் மடத்தின் முதலாம் கட்ட புனர் நிர்மாணப் பணிகள் சிறாப்பர்மட நிதியத்துடன் இணைந்து தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் சிறாப்பரின் நான்காவது வாரிசான பொன்னா விக்னராஜாவின் நினைவுதினமான நேற்று விசேட பூஜை வழிபாடுகள் சிறாப்பர் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றன.

தொடர்ந்து யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட சிறாப்பர் மடத்தின் தெற்கு பகுதி வாசல் மற்றும் அதனுடன் இணைந்த பகுதியை சிறாப்பர் நிதியத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களம் இணைந்து மீள் புனரமைப்பு செய்வதற்கான அடிக்கல் நாட்டும் விழா ஆகம முறைப்படி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகளான பா.கபிலன், உாந்தி, தொல்லியல் திணைக்கள ஊழியர்கள், நகுலேஸ்வ ஆலய குமார சுவாமி குருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிவில் சமூக அமைப்பு பங்களிப்பை அரசாங்கம் வரவேற்றாக வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அண்மையில் பிணையில் விடுவிக்கப் பட்டமையை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடை சட்டம், மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்கள் காண்பிக்கும் வலுவான பங்களிப்பை வரவேற்க வேண்டும் என அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் அது தொடர்பாக எதிர்ப்பை வெளிக்காட்டக் கூடாது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கடந்த அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது.

தற்போதைய அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தாமல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றது.

# 4 லட்சம் அன்டிஜென் பரிசோதனை கருவிகள் இலங்கைக்கு கிடைக்கும்!

## பேராசிரியர் சன்ன ஜயசுமன உத்தரவாதம்

கொழும்பு, பெப். 09

கொவிட் பரிசோதனைக்கு தேவையான 4லட்சம் ரெபிட் அன்டி ஜென் பரிசோதனை கருவிகள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

நேற்று(செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் உரை யாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பரிசோதனை கருவிகள் ஒரு வாரத்துக்குள் கிடைக்கவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மஹிந்தானந்தவிற்கு எதிரான வழக்கை மீளபெறுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு நீதிமன்று உத்தரவு

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்வைத்த குற்றச்சாட்டில் அரசாங்கத்துக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது,

குறித்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வழக்கை முன்னெடுப்பதில் சிரமம் இருந்ததால் அதனை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் நீதிமன்றத்தை நகைச்சுவை இடமாக மாற றக்கூடாது என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிக்கு நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி உத்தர விட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது சதோச நிறுவனத்தின் ஊடக 1400 கெரம்போட்கள் மற்றும் 11 ஆயிரம் தாம் போட்களை இறக்குமதி செய்து அவற்றை அரசியல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்துக்கு 5 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதோச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2022இல் வெளியிடப்பெற்றது.